# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2024/6 - 2017 ජූනි මස 19 වැනි සඳුදා - 2017.06.19

*2024/6 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 4/81* (VI)

**1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டம்**

பிரிவு 24இ மற்றும் பிரிவு 24ஈ என்பவற்றின்கீழான கட்டளை

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பினது 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 24இ என்னும் பிரிவினாலும் மற்றும் 24ஈ என்னும் பிரிவினாலும் எனக்குரித்தாகக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், இக்கட்டளைமூலம் பின்வருமாறு வெளிப்படுத்துகின்றேன்-

(அ) இதற்கான I ஆம் அட்டவணையில் எந்தக் காணிப் பிரதேசத்தின் எல்லைகள் விவரிக்கப்பட்டுள்ளனவோ, அந்தக் காணிப் பிரதேசம், மேற்கூறப்பட்ட சட்டத்தின் நோக்கங்களுக்காகச் சூழல் பாதுகாப்புப் பிரதேசமொன்றாகவிருத்தல் வேண்டுமென்றும், "வரதன்ன-ஹக்கிந்த சூழற் பாதுகாப்புப் பிரதேசம்" எனவழைக்கப்படுதலும் வேண்டும் என்றும் ;

(ஆ) இக்கட்டளை வலுவிலிருக்கும் காலம்வரை -

(i) மேற்கூறப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாகவுள்ள மேற்கூறப்பட்ட வரதன்ன-ஹக்கிந்த சூழற் பாதுகாப்புப் பிரதேசத்தினுள்ளான ஏதேனும் திட்டமிடற் செய்திட்டம் அல்லது கருத்திட்டம், அது ஆக்கப்பட்ட தேதியிலிருந்து தொழிற்படாதொழிதல் வேண்டும் ;

(ii) அதிகார சபை அல்லது அதிகார சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர் தவிர்ந்த ஆளெவரும், மேற்கூறப்பட்ட வரதன்ன-ஹக்கிந்த சூழற் பாதுகாப்புப் பிரதேசத்தின் எல்லைகளினுள் எவையேனும் தத்துவங்களை, கடமைகளை அல்லது பணிகளைப் பிரயோகித்தலோ, புரிதலோ மற்றும் நிறைவேற்றுதலோ ஆகாது ; அத்துடன்


1A – PG 3574 – 1007 (2017/06)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(iii) வரதன்ன-ஹக்கிந்த சூழற் பாதுகாப்புப் பிரதேசத்தினுள் ஏதேனும் செயற்பாட்டை நிறைவேற்றுவதற்குக் கருதுகின்ற எவரேனுமாள் இதற்கான அட்டவணை II இல் தரப்பட்டுள்ள அனுமதிக்கப்பட்ட பயன்பாடுகளை மட்டுமே நிறைவேற்றுதல் வேண்டுமென்பதுடன், இதற்கான அட்டவணை III இல் தரப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கிணங்க அதிகார சபையிடமிருந்து அங்கீகாரத்தைப் பெறுதலும் வேண்டும் ;

(இ) அதிகார சபையினால் வழங்கப்பட்ட வழிகாட்டு நெறிகளுக்கிணங்க, வரதன்ன-ஹக்கிந்த சூழற் பாதுகாப்புப் பிரதேசத்தினுள் நடைபெறுகின்ற செயற்பாடுகளைக் கீழே குறிப்பிடப்படும் உறுப்பினர்களைக் கொண்டமைந்த கண்காணிப்புக் குழுவொன்று கண்காணித்தல் வேண்டும் :-

(அ) பணிப்பாளர் பதவி வரிசைக்குக் குறையாத பதவி வரிசையிலுள்ளவரும் குழுவின் தவிசாளராகச் சேவையாற்ற வேண்டியவருமான அதிகாரசபையின் பிரதிநிதியொருவர் ;

(ஆ) இலங்கை மகாவலி அதிகாரசபையிலிருந்து பிரதிநிதியொருவர் ;

(இ) கண்டி மாவட்டச் செயலகத்திலிருந்து பிரதிநிதியொருவர் ;

(ஈ) தேசியக் கட்டிட மற்றும் ஆராய்ச்சி ஒழுங்கமைப்பிலிருந்து பிரதிநிதியொருவர் ;

(உ) நகர அபிவிருத்தி அதிகாரசபையிலிருந்து பிரதிநிதியொருவர் ;

(ஊ) வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திலிருந்து பிரதிநிதியொருவர் ;

(எ) காணிப் பயன்பாடு கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்திலிருந்து பிரதிநிதியொருவர் ;

(ஏ) கமத்தொழில் திணைக்களத்தின் இயற்கை மூலவள முகாமைத்துவ நிலையத்திலிருந்து பிரதிநிதியொருவர் ;

(ஐ) கண்டி மாநகரசபையிலிருந்து பிரதிநிதியொருவர் ;

(ஒ) ஹரிஸ்பத்துவ மற்றும் யட்டிநுவர பிரதேச சபைகள் ஒவ்வொன்றிலிருந்தும் பிரதிநிதியொருவர் ;

(ஓ) கண்டி நான்கு எல்லைகள் மற்றும் கங்கவட்ட கோறளை, ஹரிஸ்பத்துவ அத்துடன் யட்டிநுவர பிரதேச செயலகங்கள் ஒவ்வொன்றிலிருந்தும் பிரதிநிதியொருவர் ;

(ஔ) பிரதேசத்தில் தொழிற்படுகின்ற சமுதாய அடிப்படையிலான ஒழுங்கமைப்பிலிருந்து பிரதிநிதியொருவர்.

இக்கட்டளையின் நோக்கங்களுக்காக, "அதிகாரசபை" என்பது, 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட மத்திய சூழல் அதிகாரசபை என்று பொருளாகும்.

மைத்திரிபால சிறிசேன,
சனாதிபதி.

கொழும்பு,
2017, யூன் 13.

## அட்டவணை I


மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில் கண்டி கடவத்தசத்தர, கங்கவட்ட கோறளை ஹரிஸ்பத்துவ மற்றும் யட்டிநுவர பிரதேச செயலக இடப்பரப்புக்களில் அமைந்துள்ளதும் பரப்பளவில் 59.4 ஹெக்டேயர்களைக் கொண்டுள்ளதும் மகாவலி கங்கையையும் மற்றும் அதனுள் அடங்குகின்ற எல்லாத் தீவுகளையும் கொண்டமைந்ததுமான வரதன்ன-ஹக்கிந்த சூழற் பாதுகாப்புப் பிரதேசத்தின் எல்லைகள், இதன்கீழ் தரப்பட்டுள்ள படத்தில் குறித்துக்காட்டப்படுவதுடன், அது பின்வருமாறு எல்லை வரையறுக்கப்பட்டுள்ளது,

வடக்கில் : பேராதனை- ஹல்லொலுவ-கட்டுகஸ்தோட்டை "வீதியின் மத்திய கோடு தொடம்வல தொங்குபாலத்தின் மத்திய கோட்டைச் சந்திக்குமிடத்திலான புள்ளியிலிருந்து தொடம்வல தொங்குபாலத்தின் மத்திய கோடு, தொடம்பல தொங்குபாலத்தின் மத்திய கோட்டினூடாகச் ஸ்ரீமத் குடா ரத்வத்த மாவத்தையைச் சந்திக்கும் புள்ளிவரை.

கிழக்கில் : மேற்கூறப்பட்ட கடைசிப் புள்ளியிலிருந்து ஸ்ரீமத் குடா ரத்வத்த மாவத்தையின் மத்திய கோட்டினூடாகவும் இரண்டாவது ராஜசிங்க மாவத்தையின் மத்திய கோட்டினுகடாகவும் கொழும்பு-கண்டி வீதியின் மத்திய கோட்டினூடாகவும் கெட்டம்பே சுற்றுவட்டத்தின் மத்திய புள்ளிவரை.

தெற்கில் : மேற்கூறப்பட்ட கடைசிப் புள்ளியிலிருந்து கொழும்பு-கண்டி வீதியின் மத்திய கோடு கெட்டம்பே பாலத்தின் மத்திய கோட்டினூடாகவும் கொழும்பு-கண்டி வீதியின் மத்திய கோட்டினூடாகவும் பேராதனை-ஹல் ஒழுவ-கட்டுகஸ்தோட்டை வீதியின் மத்திய கோட்டைச் சந்திக்குமிடத்தில் கன்னேருவ கமத்தொழில் நிலையச் சந்தியிலிருந்து புள்ளிவரை.

மேற்கில் : மேற்கூறப்பட்ட கடைசிப் புள்ளியிலிருந்து பேராதனை-ஹல்லொலுவ-கட்டுகஸ்தோட்டை வீதியின் மத்திய கோடு, பேராதனை-ஹல்லொழுவ-கட்டுகஸ்தோட்டை வீதியின் மத்திய கோட்டினூடாகத் தொடம்வல தொங்குபாலத்தின் மத்திய கோட்டைச் சந்திக்குமிடத்திலான புள்ளிவரை.




வரதென்ன-ஹக்கிந்த சூழற் பாதுகாப்புப் பிரதேசப்படம்

## அட்டவணை II

அனுமதிக்கப்பட்ட பயன்பாடுகள்

வரதன்ன-ஹக்கிந்த சூழற் பாதுகாப்புப் பிரதேசத்தினுள் அனுமதிக்கப்பட்ட பயன்பாடுகள் :

1. நகர அபிவிருத்தி அதிகாரசபையினாலும் இயைபான உள்ளூரதிகார சபைகளினாலும் அங்கீகரிக்கப்பட்டவாறு பிரதேசத்தினுள்ளான தனிப்பட்ட காணிகளில் வாழ்மனைகளை நிர்மாணித்தலும் அலுவலகங்களையும் சிறிய அளவிலான தொழிலையும் தாபித்தலும்.

2. ஏலவேயுள்ள வாழ்மனைகளையும் வீடமைப்புத் திட்டங்களையும் விசாலித்தல் மற்றும் அவற்றின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் புனரமைப்பு.

3. ஏலவேயுள்ள அலுவலகங்களினதும் தொழில் வளவுகளினதும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் புனரமைப்பு மற்றும் புனரமைப்பு.

4. ஏலவேயுள்ள வீதிகள், நீர் மற்றும் மின்சார வழங்கல் வலையமைப்புகளைப் பேணுதலும் திருத்துதலும்.

5. மதஞ்சார், கல்விசார் மற்றும் ஆராய்ச்சி செயற்பாடுகளை நிறைவேற்றுதல்.

6. கல்விசார் மற்றும் ஆராய்ச்சி நோக்கங்களுக்காக மட்டும் தற்காலிக முகாம் அமைவிடங்களைத் தாபித்தல்.

7. சுதேச இனங்களை மட்டுமே பயன்படுத்தி மீளக்காடு வளர்த்தல், நாற்றுமேடைகள் மற்றும் மூலிகைத் தோட்டங்களை அமைத்தலும் பேணுதலும்.

## அட்டவணை III

எந்த நிபந்தனைகளுக்கமைய அனுமதிக்கப்பட்ட பயன்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டுமோ அந்த நிபந்தனைகள்

அனுமதிக்கப்பட்ட எல்லாப் பயன்பாடுகளும் பின்வருமாறு தரப்பட்டுள்ளவாறு நிபந்தனைகளுக்கிணங்க, வரதன்ன-ஹக்கிந்த சூழற் பாதுகாப்புப் பிரதேசத்தினுள் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

1. வரதன்ன-ஹக்கிந்த சூழற் பாதுகாப்புப் பிரதேசத்தினுள் II ஆம் அட்டவணையில் தரப்பட்டுள்ள அனுமதிக்கப்பட்ட பயன்பாடுகளுக்கான அங்கீகாரத்துக்கான எல்லா விண்ணப்பங்களும் அதிகாரசபைக்குச் செய்யப்படுதல் வேண்டும்.

2. II ஆம் அட்டவணையில் தரப்பட்டுள்ள எந்த அனுமதிக்கப்பட்ட ஏதேனும் பயன்பாடு, 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் பாகம் IVஇ இன்கீழான விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டம் தொடர்பானதாகவிருக்குமிடத்து, அத்தகைய விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டத்துக்கு அவசியமான முன்னங்கீகாரம் இயைபான அதிகாரசபையிடமிருந்து பெறப்படுதல் வேண்டும்.

3. அட்டவணை II இல் தரப்பட்டுள்ள அனுமதிக்கப்பட்ட பயன்பாடு 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் பாகம் IVஇ இன்கீழான விதித்துரைக்கப்பட்ட கருத்திட்டம் ஒன்றாகவில்லாதிருக்குமிடத்து -

   (அ) அதிகாரசபையினால் வழங்கப்பட்ட குறிப்பீட்டு நியதிகளுக்கு (TOR) அல்லது வினாக்கொத்துக்கு இணங்கக் கருத்திட்ட முன்மொழிவொன்று அங்கீகாரத்துக்காக அதிகாரசபைக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

   (ஆ) அத்தகைய கருத்திட்ட முன்மொழிவு, அதிகாரசபையினால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்றினால் மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், அதிகாரசபை ஒன்றில் ;

      (i) குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய முன்மொழியப்பட்ட கருத்திட்டத்தை அமுலாக்குவதற்கான அங்கீகாரத்தை வழங்குதலும் வேண்டும் ; அல்லது

      (ii) முன்மொழியப்பட்ட கருத்திட்டத்தை அமுலாக்குவதற்கான அங்கீகாரத்தைக் காரணங்களுடன் வழங்க மறுத்தலும் வேண்டும்.

(இ) அதிகாரசபையினால் வழங்கப்பட்ட அங்கீகாரம், அங்கீகாரம் வழங்கப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதிக்குச் செல்லுபடியுடையதாதல் வேண்டும்.

(ஈ) அங்கீகாரம் முடிவுறும் தேதிக்கு முன்னர் முப்பது நாட்களினுள் (30 நாட்கள்) விண்ணப்பகாரர், அதிகாரசபையிடமிருந்து அங்கீகாரத்தைப் புதுப்பிப்பதற்காக விண்ணப்பித்தல் வேண்டும்.

4. வரதன்ன-ஹக்கிந்த சூழற் பாதுகாப்புப் பிரதேசத்தினுள் -

(அ) உள்ள தீவுகளுள் எதனிலும் ; அல்லது
(ஆ) அமைந்துள்ள ஏதேனும் அரச காணியில்,

தற்காலிக அல்லது நிரந்தர நிர்மாணமெதுவும் அல்லது ஏதேனும் வகையினதான அபிவிருத்திச் செயற்பாடெதுவும் நிறைவேற்றப்படுதலாகாது.

5. குடும்பவுறுப்பினர்களிடையே பகிர்ந்தளிப்பதற்குள்ள பரம்பரைக் காணிகளை எல்லை குறித்தல் தவிர, வீடமைப்பு நிர்மாணம் அல்லது வேறேதேனும் அபிவிருத்திச் செயற்பாட்டுக்காக வர்த்தக மட்டத்தில் காணியை எல்லை குறித்தல் எதுவும் வரதன்ன-ஹக்கிந்த சூழற் பாதுகாப்புப் பிரதேசத்தினுள் நிறைவேற்றப்படுதலாகாது.

6. வரதன்ன-ஹக்கிந்த சூழற் பாதுகாப்புப் பிரதேசத்தின் நிலைபெறுதகுதன்மையைத் தடங்கல் செய்கின்ற தடை அல்லது செயற்பாடு எதுவும் அனுமதிக்கப்படுதலாகாது. நிறுவப்பட்ட அத்தகைய தடையை அகற்றும்படி அல்லது அத்தகையவொரு செயற்பாட்டை நிறைவேற்றுவதனை நிறுத்திவிடும்படி அதிகாரசபை கட்டளையிடுதல் வேண்டும்.

7. அனுமதிக்கப்பட்ட பயன்பாடுகள் தொடர்பான எல்லா அபிவிருத்திச் செயற்பாடுகளும் அதிகாரசபையினால் கொடுக்கப்பட்ட வழிகாட்டுநெறிகளின்படி அமுலாக்கப்படுதல் வேண்டும்.

8. எல்லா அனுமதிக்கப்பட்ட பயன்பாடுகளும் சூழலுக்குத் தீமை விளைவிக்காத அல்லது அதனைக் குழப்பாத அல்லது பொது மக்களுக்குத் தொல்லை ஏற்படுத்தாத அத்தகையவொரு முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

9. ஆற்றங்கரையிலிருந்து தரைநோக்கிய ஐந்து மீற்றர் (5மீ) ஒதுக்கிடப் பிரதேசம், இலங்கை மகாவலி அதிகாரசபையின் கலந்தாலோசனையுடன் அடையாளமிடப்படுதல் வேண்டும்.

10. ஆளெவரும், மேலே 9 ஆம் இலக்க நிபந்தனையிற் குறிப்பிடப்பட்ட ஐந்து மீற்றர் (5மீ) ஆற்றொதுக்கிடத்தினுள்,

(அ) தற்காலிக அல்லது நிரந்தரக் கட்டமைப்புகளை நிர்மாணித்தலாகாது.

(ஆ) அதிகாரசபையினதும் ஏனைய இயைபான நிறுவனங்களினதும் அங்கீகாரமின்றி ஏலவேயுள்ள கட்டிடங்களைப் புனரமைத்தலாகாது.

(இ) சுதேச தாவர, விலங்கின இனங்களுக்குத் தீமை விளைவித்தலாகாது அல்லது அவற்றுக்குத் தீமை விளைவிக்கக்கூடிய ஏதேனும் செயற்பாட்டை நிறைவேற்றுதலாகாது.

(ஈ) ஏதேனும் நிலத்தோற்றச் செயற்பாட்டை நிறைவேற்றுதலாகாது.

(உ) ஏதேனும் காணி நிரப்புதற் செயற்பாட்டை நிறைவேற்றுதலாகாது.

11. சூழற் பாதுகாப்புப் பிரதேசத்தினுள் ஏதேனும் இரசாயனவியற்சார் அல்லது பௌதீகவியற்சார் பதார்த்தத்தை உட்புகுத்துதல் அல்லது ஏலவேயுள்ள சூழற்சார் நிலைமைகளில் ஏதேனும் மாற்றம், கல்விசார் மற்றும் ஆராய்ச்சிச் செயற்பாடுகளின்போது செய்யப்படுதலாகாது.

12. ஆக்கிரமிப்பு பண்புகளையுடைய அல்லது ஆக்கிரமிப்பாகவிருக்கக்கூடிய தாவர, விலங்கு இனங்களெவையும், சூழற் பாதுகாப்புப் பிரதேசத்தினுள் பயிரிடப்படுதலோ அல்லது வைத்திருக்கப்படுதலோ ஆகாது. அல்லது சூழற் பாதுகாப்புப் பிரதேசத்தினுள் உட்புகுத்தப்படுதலோ ஆகாது.

13. சூழலின் தோற்றத்தை அல்லது சூழலின் காட்சிக்குரிய பெறுமதியைத் தடங்கல் செய்கின்ற நிர்மாணமெதுவும் சூழற் பாதுகாப்புப் பிரதேசத்தினுள் செய்யப்படுதலாகாது.

14. நெல் வயல்கள், சதுப்பு நிலங்கள், சேற்று நிலங்கள், தரிசு நிலங்கள் மற்றும் தாழ்நிலங்களின் மீட்டெடுப்பு அனுமதிக்கப்படுதலாகாது.

15. கழிவுநீர் அல்லது திண்மக்கழிவு, மகாவலி கங்கைக்குள், மகாவலி கங்கையுடன் இணைகின்ற அருவிகளினுள் மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட எல்லையினுள்ளான ஒதுக்கிடம் மற்றும் காணிகளினுள் செலுத்தப்படுதலோ அல்லது கையாண்டு தீர்க்கப்படுதலோ ஆகாது.

16. மகாவலி கங்கையின் பௌதீகவியற்சார் அல்லது இரசாயனவியற்சார் தரத்தை மாற்றக்கூடிய அல்லது கங்கையின் நீர்வாழ் தாவர அல்லது விலங்கினங்களுக்குத் தீங்குவிளைவிக்கக்கூடிய ஏதேனும் இரசாயனவியற் பதார்த்தம், மேற்குறிப்பிடப்பட்ட எல்லையினுள் மகாவலி கங்கையினுள், ஒதுக்கிடத்தினுள் அல்லது கங்கையுடன் இணைகின்ற ஏதேனும் அருவியினுள் செலுத்தப்படுதலாகாது.

17. பொறிமுறை அல்லது கையினாலான முறைகளைப் பயன்படுத்துவதன்மூலம் கனிப்பொருள் பிரித்தெடுத்தல் அல்லது தேடி ஆய்தற்செயற்பாடுகள் அனுமதிக்கப்படுதலாகாது.

18. ஏலவேயுள்ள அல்லது முன்மொழியப்பட்ட, அனுமதிக்கப்பட்ட எல்லாச் செயற்பாடுகளும் ;

(அ) மண் பேணல், புயல் நீர் வடிகாலமைப்பு, கழிவு (திண்ம மற்றும் திரவ) முகாமை, கழிவுநீர் முகாமை மற்றும் நிலத்தோற்ற வேலைக்கான அதன் சொந்த ஒன்றிணைந்த முகாமைத் திட்டத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஆ) அத்தகைய திட்டத்தைத் தயாரித்தல் தொடர்பில் அதிகாரசபையினால், உள்ளூர் அதிகார சபைகளினால் அல்லத ஏனைய இயைபான நிறுவனங்களினால் வழங்கப்பட்ட வழிகாட்டுநெறிகளைப் பின்பற்றுதல் வேண்டும் ; அத்துடன்

(இ) அதற்கிணங்க அபிவிருத்தியாளரினால் அமுலாக்கப்பட்டு பேணப்படுதல் வேண்டும்.

19. அனுமதிக்கப்பட்ட பயன்பாடுகளின் அங்கீகாரத்தினது செய்முறைக்காகவும் கருத்திட்ட முன்மொழியுநரிடமிருந்து அனுமதிக்கப்பட்ட பயன்பாடுகள் தொடர்பான கண்காணிப்புச் செயற்பாடுகளுக்காகவும் அதிகார சபையினால் நிருவாக விதிப்பனவொன்று அறவிடப்படுதல் வேண்டும்.

20. கிராமத்தவர்களின் பாரம்பரிய வாழ்க்கைமுறையைக் குழப்புகின்ற அத்தகையவொரு முறையில் செயற்பாடெதுவும் நிறைவேற்றப்படுதலாகாது.

21. ஏதேனும் நிபந்தனைக்கு முரணாகச் செயலாற்றுகின்ற எவரேனுமாள் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழற் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் தண்டிக்கப்படற்பாலதான தவறொன்றைப் புரிகின்றார்.

7-67

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.